மாண்புமிகு திரு. க. இராசாராம் : சென்னை பட்டாபிராமி லுள்ள சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட் என்னும் தொழிற்சாலை யில் சுமார் 1,200 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இத் தொழிற்சாலையில் இரயில் பெட்டிகள் (Railway wagons) மற்றும் கிரேன்கள் முதலியவை தயாரிக்கப்படுகின்றன. இத்தொழிற் சாலை நிதி நிலைமையின் காரணமாக 1969 முதல் 1971 வரை மூடப்பட்டது. பிறகு மேற்படி தொழிற்சாலையின் நிர்வாகத்தை மட்டும் தமிழ்நாடு அரசு 8—1—1971 முதல் ஏற்று நடத்தி வருகிறது.

இத்தொழிற்சாலையில் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் யுனைடெட் யூனியன் என்னும் தொழிற்சங்கம் இயங்கி வருகிறது. தொழி லாளர்களுக்கும் நிர்வாகத்துக்கும் உள்ள ஒப்பந்தம் 31—12—74 தேதியுடன் முடிவடைந்ததால், தொழிற்சங்கம் ஊதிய உயர்வு, பஞ்சப்படி முதலிய கோரிக்கைகளை நிர்வாகத்தின் முன் வைத்தது. இருதரப்பாரும் நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். ஆனல், இரு தரப்பினருக்கும் உடன்பாடு ஏற்படவில்லை. தொழிற்சங்கத் தலைவர் என்னை சந்தித்து இப்பிரச்சினையைப்பற்றி முறையீடு செய்தார். மீண்டும் தொழிலாளர் நல இணை ஆணை யாளர் முன்பு சமரசப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று, தொழில் தகராறு சட்டம் 12 (3) பிரிவின் கீழ் இரு தரப்பினருக்கும் இடை யில் 3-4-1975 அன்று ஒரு உடன்பாடு கையெழுத்திடப் பட்டுள்ளது.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) 1975 ஆம் ஆண்டு, சென்னை மாநகரக் காவல் துறை (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் துறை (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.